**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(குற்றவியல் நடைமுறை சட்டம் 154 இன் கீழ்)

C

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8082864

1. District / மாவட்டம்: ARIYALUR  PS / காவல் நிலையம்: V&AC ARIYALUR  Year / ஆண்டு: 2023  FIR No / முதல் தகவல் எண்: 4/2023  Date / நாள்: 16.11.2023

2. (i) Act / சட்டம்: Prevention of Corruption Act  Sections / பிரிவுகள்: 13(2) r/w 13(1)(a) of PC Act &
(ii) Act / சட்டம்: 1988 (as amended in 2018)  Sections / பிரிவுகள்: 468, 471, 477 A, 201 IPC
(iii) Act / சட்டம்: and IPC  Sections / பிரிவுகள்: 12 r/w 13(2) r/w 13(1)(a) of PC Act and 468, 471, 477A 201 IPC.
(iv) Other Acts & Sections / பிற சட்டங்களும், பிரிவுகளும்

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள்  Date from / நாள் முதல்: 20.11.2019  Date to / நாள் வரை: 13.11.2020.
Time Period / நேர அளவு: —  Time from / நேரம் முதல்: —  Time to / நேரம் வரை: —
(b) Information Received at PS Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 27.9.2022  Time / நேரம்
(c) General Diary Reference Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: Vol-III  Time / நேரம்: 17.00 Hrs.

4. Type of Information Written/ Oral: / தகவலின் வகை எழுத்து மூலம் / வாய் மொழியாக: Based on Credible information on Enquiry.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: Ariyalur Municipal office 1 km - West.
Beat Number / முறைக் காவல் எண்: —  (b) Address: / முகவரி: —
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S: / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்: —  District: / மாவட்டம்: —

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: R.CHANDRASEKAR  (b) Father's/ Husband's Name: / தந்தை / கணவர் பெயர்: C. RENGARAJ
(c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு: —  (d) Nationality / நாட்டினம்: Indian  (e) Passport No.: / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்: —
Date of Issue: / வழங்கப்பட்ட நாள்: —  Place of Issue: / வழங்கப்பட்ட இடம்: —
(f) Occupation: / தொழில்: DSP.  (g) Address: / முகவரி: V&AC, Ariyalur.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

A.O.1) Tr. N. Kumaran S/o Nallamuthu, Municipal Commissioner, Kallakurichi Municipality, formerly Ariyalur Municipal Commissioner.
A.O.2) Tr. M. Muthu Mohammed S/o Mubarak Ali, Sanitary Inspector, Duraiyur Municipality, Trichy (Dt), formerly Ariyalur Municipal S.I.
(A3) Tmt. Lalitha W/o Duraisami No. 47/79 Avvaiyar Street, Duraimangalam (Pvt Individual) Perambalur (Dt).

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்.

On Receipt of Information a Detailed Enquiry was conducted and thereafter this case was Registered and Hence the delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

———

10. Total value of properties stolen / involved .
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted

— Separate sheet attached — .

13. Action taken Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Mrt. T. Rameswari Rank Inspector of Police, V&AC, Perambalur. to take up the Investigation / Refused Investigation / transferred to PS........ ——.................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை . மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........ ...................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost
முதஅ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant :
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு ——

(Signature) 16/11/2023.
Signature of the Officer in-charge / Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
16.11.2023 / 17.00 Hrs

Name: பெயர் R. CHANDRASEKAR
Rank: நிலை DSP, V&AC, ARIYALUR. No. எண் ........

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 04/2023 முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-க்கான இணைப்பு:-

அரியலூர் நகராட்சியில் 20.11.2019 ம் தேதி முதல் 13.11.2020-ம் தேதி வரை நகராட்சி ஆணையராக பணிபுரிந்த திரு.குமரன் என்பவர் கோவிட்-19 (கொரோனா) பெருந்தொற்று காலத்தில் அரசால் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட சிறப்பு நிதி மற்றும் அரியலூர் நகராட்சி நிர்வாக பொது நிதியிலிருந்து கொரோனா முன்தடுப்பு நடிவடிக்கைக்கான பொருட்களை பெரம்பலூர் ஸ்ரீ சுதர்சனா டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தில் வாங்கியதாக போலியான ஆவணங்களை தயார் செய்து, மேற்படி நிதியினை கையாடல் செய்து, அரசுக்கு பண இழப்பை ஏற்படுத்தியது சம்பந்தமாக இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை அவர்கள் 11.08.2022-ம் தேதி உத்தரவிட்டதன் பேரில் மேற்கொள்ளப்பட்ட விரிவான விசாரணையில் தெரியவந்த விபரங்கள் பின்வருமாறு.

1-ம் எதிரியான திரு.ந.குமரன் என்பவர் அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சி ஆணையராக 13.11.2019 முதல் 19.11.2020 வரை பணிபுரிந்துள்ளார். தற்போது கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையராக(Grade-I) பணிபுரிந்து வருகிறார்.

2-ம் எதிரியான திரு.மு.முத்துமுகமது என்பவர் அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சியில் 20.02.2014 முதல் 08.12.2021 வரை துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்துள்ளார். தற்போது திருச்சி மாவட்டம், துறையூர் நகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார்.

மேற்படி 1 மற்றும் 2-ம் எதிரிகள் ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தம் 2018) பிரிவு 2 (c)-ன்படி பொது ஊழியர்கள் ஆவார்கள்.

3-ம் எதிரியான திருமதி.லலிதா க/பெ துரைசாமி என்பவர் தனி நபர் ஆவார். இவர் 1-ம் எதிரியின் உறவினர்.

2020-ம் ஆண்டு கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள தேவையான அத்தியாவசிய உபகரணங்கள் மற்றும் பிற சுகாதார பொருட்கள் வாங்குவதற்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து அரசு முதன்மை செயலாளர்/ஆணையாளர் வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் மீட்புக்குழு, சென்னை அவர்களின் கடித எண் 563/O.C1/2020 நாள்: 19.03.2020, 24.03.2020, 08.04.2020 மற்றும் 22.04.2020-ன்படியும், ஆணையாளர் நகராட்சி மற்றும்

16/11/2023
DSP/V&AC/Ari.

நிர்வாகம் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண் 3336/J2/2020-4 நாள்: 24.03.2020, 31.03.2020, 09.04.2020 மற்றும் 23.04.2020 ஆகியவற்றின்படியும் தமிழகத்திலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கும் மொத்தம் ரூபாய் 67,00,00,000/-(ரூபாய் அறுபத்து ஏழு கோடி) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்யும் போது சில நிபந்தனைகளை விதித்து தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த தொகையினை நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு அல்லாமல் வேறு எந்த பயன்பாட்டிற்கும் செலவு செய்யக்கூடாது என்றும், அனைத்து கொள்முதல்களும் கண்டிப்பாக கண்காணிக்கப்பட வேண்டும் என்றும், வாங்கும் உபகரணங்களை செயல்படுத்தும் முகவர்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும், பொருட்கள் கொள்முதல் செய்யும் போது கண்டிப்பாக டெண்டர் சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு வெளிப்படைத்தன்மை விதிகள் 2000 ஆகியவற்றை பின்பற்றி டெண்டர் மேற்கொள்ள வேண்டும் என்றும், மேற்கூறிய சட்ட விதிகள் 9 மற்றும் 10-க்கு விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும், தேவைக்கேற்ப செலவீனம் செய்தது போக மீதமுள்ள தொகையை மாநில பேரிடர் நிவாரண நிதி கணக்கில் திருப்பி செலுத்திவிட வேண்டும் என்றும், கொள்முதல்களை விரைந்தும், நேர்மையாகவும் வெளிப்படையாகவும் முடிக்க வேண்டும் என்றும், கொள்முதல் முடிந்ததும் பயன்பாட்டு சான்றிதழ்களை பெற்று இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் என்பது போன்ற பல நிபந்தனைகளுடன் அரியலூர் நகராட்சிக்கு ரூ.20,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எதிரி-1 திரு.குமரன் அவர்கள் அரியலூர் நகராட்சி ஆணையராக பதவியேற்ற பிறகு நகராட்சிக்கு கொள்முதல் செய்யப்படும் பொருட்கள் மூலமாக அரசு பணத்தை கையாடல் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அரசு ஊழியர் நன்னடத்தை விதிகளுக்கு முரணாக தான் குடியிருந்து வந்த வீட்டிற்கு அருகிலேயே பெரம்பலூர், துறைமங்களம், ஔவையார் தெரு, கதவு எண்.147 என்ற முகவரியில் வசித்து வரும் தனது மனைவியின் சகோதரியான 3-ம் எதிரி திருமதி.லலிதா துரைசாமி என்பவர் மூலம் ஸ்ரீசுதர்சனா டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தை 19.02.2020-ம்தேதியன்று தொடங்கியுள்ளார்.

எதிரி-1 திரு.குமரன் அவர்கள் அரியலூர் நகராட்சி அலுவலக ந.க.எண.996/2020/எச்.1, நாள்: 16.03.2020-ன்படி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கான கிருமி நாசினிகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்ய உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து குறுகிய கால விலைப்புள்ளி கோரும் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அதில் தனது உறவினர் பெயரில் புதிதாக தொடங்கப்பட்ட நிறுவனத்திலிருந்து ஒரு விலைப்புள்ளி பெற்றும், தனது உறவினர் நிறுவனத்திற்கு டெண்டர் வழங்குவதற்கு ஏதுவாக RMK Enterprises, பெரம்பலூர் மற்றும் RR Traders, திருச்சி என்ற நிறுவனங்களின் Letter Pad-களைஅந்த நிறுவனங்களுக்கு தெரியாமல் பயன்படுத்தி (கலர் ஜெராக்ஸ் எடுத்து) அந்த நிறுவனங்கள்

Pehl 16/11/2023
DSP/V&AC/ARL.

அதிக விலைகளுக்கு விலைப்புள்ளிகள் கோரியது போன்று ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி, ஒப்புநோக்கு பட்டியலில் குறைந்த விலைப்புள்ளி கோரியதாக தனது உறவினரின் நிறுவனமாக ஸ்ரீசுதர்சனா டிரேடர்ஸ் நிறுவனத்தினை மோசடியாக தேர்வு செய்து தனது அலுவலக ந.க.எண்.996/2020/இ1, நாள்:19.03.2020-ன்படி ரூ.1360000/-க்கு சப்ளை ஆர்டர் வழங்கி ஆணையிட்டுள்ளார். எதிரிகள் 1 மற்றும் 2 ஆகியோர்கள் கூட்டாக சேர்ந்து மேற்கண்ட அரசு பணத்தை கையாடல் செய்யும் நோக்கில் செயல்பட்டு அதன்படி மேற்படி நிறுவனத்திடமிருந்து 23.03.2020-ம்தேதியன்று நகராட்சி அலுவலகத்தில் பொருட்கள் பெறாமலேயே, பெறப்பட்டதாக குற்ற அலுவலர்-2 திரு.முத்து முகமது, துப்புரவு ஆய்வாளர் என்பவரால் பட்டியலில் சான்றளிக்கப்பட்டுள்ளது.

பின்னர் எதிரி-1 மேற்கண்ட கொள்முதலில் மேற்கொண்ட அதே விதி மீறல்களை செய்து தனது உறவினரின் நிறுவனமான ஸ்ரீசுதர்சனா டிரேடர்ஸ் நிறுவனத்தில் 03.04.2020-ம்தேதி ரூ.5,00,000/-க்கு பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டதுபோல் போலியான ஆவணங்களை தயார் செய்து, குற்ற அலுவலர்-2 திரு.முத்துமுகமது என்பவரின் உதவியுடன் Stock Register-ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. பின்னர் மேற்படி நிறுவனத்தின் உரிமையாளருக்கு நகராட்சி அலுவலக பொது சுகாதார பிரிவு கோப்பு எண். 090/20-21/0000020, நாள்:15.04.2020-ன்படி ரூ.5,00,000/-ம் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. 20.04.2020-ம் தேதியன்று எதிரி-1 திரு.குமரன் அவர்கள் டெண்டர் நடைமுறைகள் எதையும் பின்பற்றாமல் தன்னிச்சையாக Relaint Global Green Energy & Co, கோயம்புத்தூர் என்ற நிறுவனத்திலிருந்து 5000 முகக்கவசம் மற்றும் 50 PPE Kit ஆகியவற்றினை ரூ.98858/-க்கு கொள்முதல் செய்துள்ளார். அதற்கான பட்டியல் தொகையினை வ.கொ.சீ.எண். 33/22.04.2020-ன்படி வைப்புத்தொகை ரூ.1,000/- பிடித்தம் செய்யப்பட்டது போக, மீதமுள்ள தொகை ரூ.97,858/- மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், எதிரி-1 டெண்டர் நடைமுறைகளை பின்பற்றாமல் போலியான விலைப்புள்ளிகள் தயார் செய்து, தனது உறவினரின் போலி நிறுவனமான ஸ்ரீசுதர்சனா டிரேடர்ஸ் நிறுவனத்தில் ரூ.987664/-க்கு கொள்முதல் செய்யப்பட்டதுபோல் நகராட்சி அலுவலக பொது சுகாதார கோப்பு எண். எச்.1/2075/2020-ன்படி ஆவணங்களை தயார் செய்து, குற்ற அலுவலர்-2 திரு.முத்துமுகமது என்பவரின் உதவியுடன் மேற்படி பொருட்கள் யாவும் பெறப்பட்டதுபோல் Stock Register-ல் பதிவேற்றம் செய்துள்ளார். மேலும், மேற்கண்ட ரிலைன்ட் குளோபல் கிரீன் எனர்ஜி, கோயம்புத்தூர் நிறுவனத்தில் கொள்முதல் செய்துள்ள இரண்டு பொருட்களையும், அதே நாளில் தனது உறவினரின் நிறுவனமான ஸ்ரீசுதர்சனா டிரேடர்ஸ் என்ற நிறுவனத்திலும் கொள்முதல் செய்துள்ளதாக போலி ஆவணங்கள் தயார் செய்துள்ளார்.

Sd/- 16/11/2023
DSP/VRAC/Ariyalur

எதிரி-1 திரு.குமரன் அவர்கள் அரியலூர் நகராட்சி அலுவலக இஞ்சினியரிங் பிரிவு ந.க.எண்.997/2020/எச்.1-ன்படி 24.03.2020-ம்தேதி கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கான கிருமி நாசினிகள் தெளிக்கும் இயந்திரம் (ஸ்பிரேயர்கள்) கொள்முதல் செய்ய உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து குறுகிய கால விலைப்புள்ளி கோரும் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அதனை பயன்படுத்தி கையாடல் செய்யும் நோக்கத்தோடு தன்னிச்சையாக ஸ்ரீமா அக்ரோ ஏஜன்சிஸ், அரியலூர் என்ற நிறுவனத்திலிருந்து அதிக விலைக்கு விலைப்புள்ளி பெற்றும், அத்துடன் பூர்த்தி செய்யப்படாத விலைப்புள்ளி பட்டியல் ஒன்றினை வாங்கிச்சென்றும், ராஜி ஏஜென்சி, ஜெயங்கொண்டம், தி பவர் ஹவுஸ், எலக்ட்ரிக்கல்ஸ் & பிளம்பிங்ஸ், அரியலூர் ஆகிய நிறுவனங்கள் போட்டி நிறுவனங்களாக டென்டரில் கலந்து கொண்டது போல் போலியான விலைப்புள்ளிகள் தயார் செய்தும், ஸ்ரீமா அக்ரோ நிறுவனத்தில் பெற்றுச்சென்ற பூர்த்தி செய்யப்படாத விலைப்புள்ளியினை பயன்படுத்தி ரூ.79,912/-க்கு பட்டியல் தயார் செய்து, மேற்படி பட்டியல் தொகையில் ரூ.800/- டென்டர் டெபாசிட் தொகையாக பிடித்தம் செய்து கொண்டு மீதமுள்ள தொகை ரூ.79,112/-ஐ ஸ்ரீமா அக்ரோ நிறுவனத்திற்கு வழங்கிவிட்டு. அந்நிறுவனத்தினரிடம் உங்கள் கடையின் பேரில் ஸ்பிரேயர் வாங்குவதற்காக ரூ 79112-க்கு ஒரு பில் போட்டுவிட்டேன். ஆனால் எங்களுக்கு தற்போது ஸ்பிரேயர் தேவையில்லை. கொரோனா தடுப்ப நடவடிக்கைகளுக்கு தேவையான வேறு சில பொருட்கள் உடனடியாக வாங்க வேண்டியுள்ளது. எனவே, அந்த பணத்தை வங்கியிலிருந்து எடுத்து கொடுக்கும்படி கேட்டு அந்த தொகையை பெற்றுள்ளார்.

பின்னர் எதிரி-1 திரு.குமரன் அவர்கள் தனது உறவினரின் நிறுவனமான ஸ்ரீசுதர்சனா டிரேடர்ஸ் நிறுவனத்திலிருந்து எந்தவித கொள்முதலும் செய்யாமல், பட்டியல்கள் எதுவும் பெறாமல் தன்னிச்சையாக தனது அதிகாரத்தை பயன்படுத்தி மேற்படி நிறுவனத்திற்கு 15.04.2020-ம்தேதி ரூ.4,86,000/-க்கான காசோலையினை வழங்கியுள்ளார். மேற்படி காசோலையானது 17.04.2020-ம்தேதியன்று காசாக்கம் செய்யப்பட்டுள்ளது. பின்னர் இதனை ஈடுகட்டும் விதமாக எதிரி-1 திரு.குமரன் அவர்கள் பின்னிட்டு 29.08.2020-ம்தேதி மேற்படி நிறுவனத்தில் ரூ.486000/-க்கு தூய்மைப்பணிக்கான பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டதுபோல் போலியான ஆவணங்களை தயார் செய்துள்ளார். அதற்கு எதிரி-2 திரு.முத்துமுகமது என்பவர் உடந்தையாக இருந்து மேற்படி பட்டியல் பொருட்களை Stock Register-ல் பதிவேற்றம் செய்துள்ளார்.

3-ம் எதிரியின் நிருவனமான ஸ்ரீசுதர்சனா டிரேடர்ஸ் அரியலூர் நகராட்சிக்கு சப்ளை செய்த பொருட்களை பெரம்பலூர் ஸ்ரீ கிருஷ்ணா எலக்ட்ரிக்கல்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ததாக போலி ஆவணங்கள் தயார் செய்துள்ளது. இந்த ஸ்ரீ கிருஷ்ணா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம் 3-ம் எதிரியின் மகன் விஜய் துரைசாமி என்பவர் பெயரில் உள்ளது. இவர்தான் ஸ்ரீசுதர்சனா டிரேடர்ஸ் நிறுவனத்தின்

16/11/2023
DSP/V&AC/Ari

கணக்குகளை பராமரித்து வருகிறார். 1-ம் எதிரி திரு.குமரன் 3-ம் எதிரி திருமதி.லலிதா துரைசாமி என்பவரின் துணையோடு அரசு பணத்தை கையாடல் செய்து பின்னிட்டு அந்த குற்றச் செயலில் இருந்து தப்பிக்க மேற்கண்ட நிறுவனங்கள் மூலம் போலியான பில்கள் தயார் செய்துள்ளார்.

அரியலூர் நகராட்சியால் 18.05.2020 மற்றும் 21.06.2020 ஆகிய தேதிகளில் கிருமி நாசினி பொருட்கள் எதுவும் கொள்முதல் செய்யப்படவில்லை. ஆனால் குற்ற அலுவலர் 2 தி.முத்துமுகமது என்பவர் கொள்முதல் செய்யப்படாத பொருட்களை 18.05.2020 மற்றும் 21.06.2020 ஆகிய தேதிகளில் ஸ்ரீசுதர்சனா நிறுவனத்தினிடமிருந்து வாங்கி தான் சரிபார்த்து நகராட்சி கிடங்கில் வைத்தது போலவும், அந்த பொருட்களை துப்புரவு பணி மேற்பார்வையாளர்களுக்கு வழங்கியது போலவும் Stock Register-ல் பதிவு செய்து அதில் கையொப்பமும் செய்துள்ளார். அந்த பதிவேட்டினை சரிபார்த்ததாக நகராட்சி ஆணையர் (எதிரி-1) திரு.குமரன் என்பவரும் அதில் கையொப்பம் செய்துள்ளார். இதிலிருந்து நகராட்சியில் பராமரிக்கப்பட்டதாக கூறப்படும் Stock Register கையாடல் செய்த குற்றத்தை மறைக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக தயாரிக்கப்பட்ட பொய்யானவணம் என்பது தெரியவருகிறது. மேலும் அரியலூர் நகராட்சி அலுவலகத்தில் 2020-ம் ஆண்டுக்கு முன்பும், அதற்கு பின்பும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்களால் Stock Register ஏதும் பராமரிக்கப்படவில்லை என்பதிலிருந்தும், நகராட்சியில் பணிபுரியும் தற்காலிக பணியாளர்களை கொண்டு Stock Register தயார் செய்ததிலிருந்தும், பொய்யாவணம் எதிரிகளால் புனையப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

அரியலூர் நகராட்சியின் 2020-21-ம் ஆண்டுக்கான வருவாய் மற்றும் மூலதன நிதி கணக்கு மற்றும் இதர கணக்குகள் மீதான ஒருங்கிணைந்த தணிக்கை அறிக்கையில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக பொது சுகாதார பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்ததில் செலவீன பட்டியல்கள் காண்பிக்கப்படவில்லை என்றும், இருப்பு பதிவேட்டில் அவை முறையாக பதியப்படவில்லை என்றும், 2017-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படும் சரக்கு மற்றும் சேவை வரி சட்டம், பிரிவு 51 மற்றும் வணிக வரி மற்றும் பதிவுத்துறை அரசுஆணை எண். 122/12.09.2018-ன்படி 01.10.2018 முதல் 2.5 லட்சத்திற்கு மேல் கொள்முதல் செய்யப்படும் பொருட்களுக்கு பட்டியல் மதிப்பில் 2% சரக்கு மற்றும் சேவை வரி பிடித்தம் செய்யப்பட வேண்டிய நடை முறைகளை பின்பற்றி, வரி பிடித்தம் செய்யப்படவில்லை என்றும், மிகையான சரக்கு மற்றும் சேவை வரி செலுத்தி பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதன் மூலம் அரசுக்கு ரூ.11,51,476.52/- நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது எனவும், அதற்கு காரணமாய் இருந்த நகராட்சி ஆணையரிடமிருந்து மேற்படி தொகையினை வசூலித்து உரிய கணக்கு தலைப்பின் கீழ் அது செலுத்தப்பட வேண்டும் என்றும், மேலும், ஒரு சில பட்டியல்களின் செலவீனத்தொகையை அனுமதிக்க தகுதியற்றதாக தணிக்கையில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

16/11/2023
DSP/V&AC/Arl.

எதிரி-1 திரு.குமரன், த/பெ. நல்லமுத்து, முன்னாள் நகராட்சி ஆணையர், அரியலூர் நகராட்சி (தற்போது நகராட்சி ஆணையர், கள்ளக்குறிச்சி நகராட்சி) என்பவர் 2020-21-ம் நிதியாண்டில் கோவிட்-19 பெருந்தொற்று நடவடிக்கைகளுக்காக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து அரியலூர் நகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ.20,00,000/- மற்றும் அரியலூர் நகராட்சி நிர்வாக பொது நிதி ரூ.11,24,770/- ஆக மொத்தம் ரூ.31,24,770/- அரசு பணத்தை அரியலூர் நகராட்சி ஆணையராக 20.11.2019 முதல் 13.11.2020 வரை பணிபுரிந்த காலகட்டத்தில் அதே அலுவலகத்தில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்த எதிரி-2 திரு.முத்து முகமது மற்றும் தனது மனைவியின் சகோதரியான எதிரி-3 திருமதி.லலிதா துரைசாமி ஆகியோர்களோடு ஒன்று சேர்ந்து, பொது ஊழியரான தனது கட்டுப்பாட்டில் உள்ள மேற்கண்ட பணத்தை மோசடியாக கையாடல் செய்து பண ஆதாயம் அடையவேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் செயல்பட்டு அதை நிறைவேற்றும் வகையில் தனது உறவினர் எதிரி-3 திருமதி.லலிதா துரைசாமி என்பவர் பெயரில் ஸ்ரீ சுதர்சனா டிரேடர்ஸ், பெரம்பலூர் என்ற நிறுவனத்தை போலியாக ஆரம்பித்தும்மேற்கண்ட கொரானா நிவாரண பொருட்கள் கொள்முதல் செய்ய விடப்பட்ட டெண்டரில் அந்த நிறுவனம் கலந்து கொண்டு குறைந்த விலைப்புள்ளிகள் கோரியதுபோலவும், மேலும் அந்த டென்டரில் இரண்டு வேறு நிறுவனங்கள் கலந்து கொண்டு அதிக விலைப்புள்ளிகள் கோரியது போலவும் மோசடி செய்யும் நோக்கத்தில் போலி ஆவணங்கள் தயார்செய்து டென்டர் விதிகளுக்கு முரணாக டென்டர் விட்டு அதில் தனது உறவினரான எதிரி-3 திருமதி.லலிதா துரைசாமி என்பவரின் செயல்படாத நிறுவனத்திற்கு கிருமி நாசினி மற்றும் கொரானா தடுப்புப் பொருட்கள் சப்ளை செய்வதற்கான ஆணை வழங்கியும் அதனைத் தொடர்ந்து அனைத்து கொள்முதலுக்கான டெண்டர்களை தனது உறவினரான எதிரி-3 திருமதி.லலிதா துரைசாமி நிறுவனத்திற்கே வழங்கியும், கொரானா தொற்று தடுப்பு பொருட்கள் எதையும் கொள்முதல் செய்யாமலேயே கொள்முதல் செய்தது போல் எதிரி-2 திரு.முத்து முகமது (துப்புரவு ஆய்வாளர்) என்பவர் மூலம் போலியான பட்டியல் தயார்செய்துஅந்த பட்டியலில் உள்ள பொருட்களுக்கான தொகையை எதிரி-3 திருமதி.லலிதா துரைசாமி என்பவர் நிறுவனத்தின் பெயருக்கு காசோலை வழங்கி அதை எதிரி-3 உதவியுடன் காசாக்கம் செய்து அந்த பணத்தை தனதாக்கிக்கொண்டு பண ஆதாயம் அடைந்துள்ளார்கள். மேற்கண்ட குற்ற செயல்களை மறைக்கும் பொருட்டு இருப்புபட்டியல்கள் (Stock Registers) தயார்செய்து இல்லாத பொருட்களை இருப்பில் உள்ளதாக 1-ம் எதிரியின் வழிகாட்டுதல்படி 2-ம் எதிரி பொய்கணக்கெழுதி பொய்யாவணம் புனைந்துள்ளார்.

மேலும், அந்த போலி ஆவணங்களை உண்மையான ஆவணம் போல் பயன்படுத்தியுள்ளார்கள். சில ஆவணங்களை மறைத்தும் உள்ளார்கள். மேற்கண்ட செய்கையின் மூலம் 1 முதல் 3 வரையுள்ள எதிரிகள் ரூ.31,24,770/- அரசு பணத்தை கையாடல் செய்துள்ளார்கள்.

16/11/2023
DSP/V&AC/Ari.

மேற்கண்ட விபரங்களிலிருந்து எதிரிகள் 1 மற்றும் 2 ஆகியோர்கள் u/s 13(2) r/w 13(1)(a) of PC Act 1988 (As amended in 2018) and 468, 471, 477(A), 201 IPC -ன்படியும், எதிரி-3 u/s 12 r/w 13(2) r/w 13(1)(a) of PC Act 1988 (As amended in 2018) and 468, 471, 477(A), 201 IPC-ன்படியும் தண்டிக்கக்கூடிய குற்றத்தினை புரிந்துள்ளார்கள் என்பதற்கான ஆதாரங்களும், முகாந்திரமும் உள்ளது என்பது தெரியவருகிறது.

எனவே, எதிரிகள் 1 மற்றும் 2 ஆகியோர்கள் மீது அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 04/2023 u/s 13(2) r/w 13(1)(a) of PC Act 1988 (As amended in 2018) and 468, 471, 477(A), 201 IPC -ன்படியும், எதிரி-3ன் மீது u/s 12 r/w 13(2) r/w 13(1)(a) of PC Act 1988 (As amended in 2018) and 468, 471, 477(A), 201 IPC-ன்படியும் இன்று 16.11.2023 தேதி 16.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல் மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர்/சிறப்பு நீதிபதி, அரியலூர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதன் நகல் ஒன்று புலன்விசாரணை மேற்கொள்ளவேண்டி திருமதி.T.இராமேஸ்வரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, பெரம்பலூர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. மேலும் ஒரு நகல் இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை அவர்களுக்கு தவலுக்காக அனுப்பப்பட்டது.

16/11/2023.

காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
அரியலூர்.